முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (12.1.2025) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் சந்தித்து, கலை பண்பாட்டுத்துறை சார்பில் சென்னையில் 13.01.2025 முதல் 17.01.2025 வரை நடைபெறவுள்ள "சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.

திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி ஏற்பாட்டில் சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதியில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை கொண்டாடும் வகையில் (12.01.2025) நேற்று புளியந்தோப்பு அம்பேத்கர் சாலையில் அமைந்துள்ள திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் 71, 71(அ) 72, 72(அ), 73, 73(அ), 74, 74(அ), 75, 75(அ), 76,76(அ) ஆகிய அனைத்து வட்டங்களிலும் உள்ள பகுதிக்ககழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் அனைத்து பாக முகவர்கள் ஆகியோருக்கு பொங்கல் பரிசினை கழக துணை அமைப்பு செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே சேகர்பாபு வழங்கினார். உடன் மேயர் பிரியா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

நன்னிலம் தொகுதியில் வலங்கைமான் புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை

நீடாமங்கலம் - வலங்கைமான் பகுதிகளை இணைக்க உயர் மட்டப் பாலம்!

சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பதில்!

சென்னை, ஜன. 13 -

நன்னிலம் தொகுதியில் வலங்கைமான் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா? என சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதில் வருமாறு:-

வலங்கைமான் புறவழிச் சாலையானது கும்பகோணம் மான்னார்குடிஅதிராம்பட்டினம் சாலை மாடாகுடி அருகில் துவங்கி அதே சாலையில் தொழுவூரிலே சேருகிறது. மொத்த நீளம் 5.40 கிலோ மீட்டர். இருவழிச் சாலையானது 7 கிராமங்களை உள்ளடக்கி 15.30 ஹெக்டேர் தனியார் நிலம் கையகப்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இப்புறவழிச் சாலை அமைக்க நில எடுப்புப் பணிக்காக ரூ.3.14 கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டிருக்கிறது. இது போதவில்லை என்று தற்போது கூடுதலாக ரூ.1.71 கோடி திருத்திய நிர்வாக அனுமதி கோரி அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நில எடுப்புப் பணிகள் முடிந்த உடனேயே புறவழிச் சாலை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருவாரூர் நெடுஞ்சாலை கோட்டத்திற்குட்பட்ட மாநில நெடுஞ்சாலை எண் 66ல் வலங்கைமான் குடமுருட்டி ஆற்றிலிருந்து தொழுவூர் ஊராட்சி செம்மங்குடி வரை பழுதடைந்துள்ள சாலையை உடனடியாக சரி செய்து செம்மைப்படுத்தி தருமாறு உறுப்பினர் குறிப்பிட்டார்.

உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல அதன் முக்கியத்துவம் கருதிதான் இன்னும் கூடுதலாக ரூ.1.71 கோடி வேண்டுமென்று நிதித் துறைக்கு அனுப்பியிருக்கிறோம். உடனே அந்த பணத்தைப் பெற்று நிலம் எடுக்கப்பட்டு இந்த ஆண்டே அந்தப் பணி தொடங்குவதற்கு அரசு முன்வரும்.

இரா.காமராஜ்: திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வலங்கைமான் வட்டம், நார்த்தாங்குடி ஊராட்சி பகுதியில் அதாவது, கோயம்புத்தூர் நாகப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலை மற்றும் கும்பகோணம், அதிராம்பட்டிணம், மன்னார்குடி வழியாக கும்பகோணம் அதிராம்பட்டிணம் மாநில நெடுஞ்சாலை ஆகிய இந்த இரண்டு சாலைகளும் நார்த்தாங்குடியிலேதான் சந்திக்கிறது. இந்த bypass வேலை முடிந்து 6, 7 மாதங்கள் ஆகிறது. இந்த இரண்டு சாலைகளும் சந்திக்கிற இந்த நார்த்தாங்குடியில் தினந்தோறும் அதிகமான விபத்துகள் நடந்துகொண்டிருக்கிறது. இந்த விபத்துகளைத் தவிர்க்கும்பொருட்டு அங்கே ஒரு உயர்மட்டப் பாலம் அமைப்பதற்கு அமைச்சர் முன்வருவார்களா என குறிப்பிட்டார்.

திருவாரூர் என்பது ஒரு புகழ்பெற்ற ஊர். என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற என் அன்புத் தலைவர் திருவாரூரில்தான் அவர் வாழ்ந்த வரலாறு உள்ள ஒரு மாபெரும் ஊர், அந்த ஊர்.

அந்த திருவாரூரையும், தஞ்சாவூரையும் இணைப்பது, தேசிய நெடுஞ்சாலை ஆகும். அதேநேரத்தில், நீடாமங்கலம் மற்றும் வலங்கைமான் பகுதிகளை இணைப்பது, மாநில நெடுஞ்சாலை ஆகும். அந்தப் பகுதியில்தான் உயர்மட்டப்பாலம் கட்டப்படுமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நாங்களும் அடிக்கடி திருவாரூர் செல்கின்ற காரணத்தால், விபத்துகளைக் குறைக்க வேண்டிய காரணத்தால், அதன் முக்கியத்துவம் கருதி, அதன் அடிப்படையில் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம். அவசியமாக அப்பகுதியில் ஒரு உயர் மட்டச் சாலை அமைக்கப்பட வேண்டுமென்று கடிதம் எழுதியிருக்கிறோம். அதனை தொடர்ந்து வலியுறுத்தி, நிறைவேற்றிக் கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்யும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடப்பு சம்பா, தாளடி பருவ அறுவடை நெல் கொள்முதலுக்கு

1126 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறப்பு!

5,48.422 மெட்ரிக் டன் நெல் கொள்முதல்! அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தகவல்!

சென்னை, ஜன. 13 -

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடப்பு சம்பா, தாளடி பருவ அறுவடை நெல்லை கொள்முதல் செய்வதற்காக நாளது தேதியில் 1176 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 5,48,422 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் தேவையான கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திட மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும், அக்டோபர் 1ம் தேதி துவங்கும் நெல் கொள்முதல் பருவத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் நலன் கருதி செப்டம்பர் மாதம் முதல் துவங்க கடந்த மூன்று ஆண்டுகளாக ஒன்றிய அரசிடம் அனுமதி பெற்று, செப்டம்பர் 1ந் தேதி முதல் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், கே.எம்.எஸ் 2023 2024ம் கொள்முதல் பருவத்தில் நெல் கொள்முதலை அதிகரிக்க ஏதுவாக, விவசாயி களை ஊக்குவிக்கும் விதமாக மாநில அரசால் ஏற்கனவே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.75/ லிருந்து ரூ.107/ ஆகவும், பொது ரகம் ரூ. 50 லிருந்து ரூ. 82 ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டது. மேலும் நடப்பு கே.எம்.எஸ் 20242025 ம் கொள்முதல் பருவத்திற்காக ஏற்கனவே, வழங்கி வந்த ஊக்கத்தொகை குவிண்டால் ஒன்றுக்கு முறையே சன்னரகம் ரூ. 107 லிருந்து ரூ.130 ஆகவும் பொது ரகம் ரூ.82 லிருந்து ரூ.105 ஆகவும் உயர்த்தி குறைந்தபட்ச ஆதார விலையுடன் ஒரு குவிண்டால் சன்னரகம் நெல் ரூ.2,450/க்கும் பொதுரகம் நெல் ரூ.2405/க்கும் விவசாயிகளி டமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் கடந்த கே.எம்.எஸ் 20212022 மற்றும் 2022 2023 ஆகிய பருவங்களில் சுமார் 40 இலட்சம் மெ.டன் னிற்கு கூடுதலாக நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் நடப்பு கே.எம்.எஸ் 2024-2025ம் பருவத்தில் 01.09.2024 முதல் 09.01.2025 வரை 75,936 விவசாயிகளிடமிருந்து 5,48,422 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, கொள்முதலுக்கான விலையாக ரூ.1,313.96 கோடி விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் சம்பா, தாளடி நெல் அறுவடைப் பணிகள் தொடங்கியுள்ளதால், நாளது தேதியில் 1176 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப் பட்டு செயல்பட்டு வருகிறது. நடப்பு கொள்முதல் பருவத்திற்காக 8281 பருவகாலப் பணியாளர்கள் நியமிக்க ப்பட்டு 3448 எண்ணிக்கையிலான தூற்றும் இயந்திரங்கள், 3980 எண்ணிக்கையி லான ஈரப்பத சோதனை மானிகள், தேவையான அளவு காலிசாக்குகள் கொள்முதல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. நேரடி கொள்முதல் நிலையங்கள் திறப்பது மற்றும் புகார்கள் தொடர்பாக தலைமை அலுவலக உழவர் உதவி மையம் சேவை 1800 599 3540 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் மூலம் நிவர்த்தி செய்து கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்ப, தேவையான கூடுதல் இடங்களில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்து எவ்வித புகாருக்கும் இடமின்றி விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்திட ஏற்கனவே மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவி த்துக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தெரிவித்தார்.

மயிலாடு துறை வெங்கடேசன்-திருச்சிஆரிஃப் மக்பூல் தயாரிப்பு! சிவ சேனாதிபதி முன்னிலை!

சவுதி அரேபியா அயலக தி.மு.க. அணி பாடல் வெளியீட்டு விழா!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டார்!கலாநிதி வீராசாமி எம்.பி- எம்.எம்.அப்துல்லா எம்.பி.- பங்கேற்பு

சென்னை, ஜன.13-

அயலக தமிழர் தினம் 2025 விழா சென்னை நந்தனம் வர்த்தக மையத்தில்நடைபெற்றது.

இவ் விழாவில் சவுதி அரேபியா அயலக தி.மு.க .அணி பாடல் வெளீயீடு செய்யபட்டது.

இப்பாடலை சவுதி அரேபியா கிழக்கு மண்டலம் அயலக அணி மயிலாடுதுறை வெங்கடேசன் திருச்சி ஆரிஃப் மக்பூல் ஆகியோர் தயாரித்துள்ளனர்.

கவிஞர் நாகூர் பாரி எழுதி கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் இப் பாடலை பாடியுள்ளார்.

இந்த பாடலடங்கிய ஆடியோவை தமிழக கல்விதுறை அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி வெளியிட டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., புது கோட்டை அப்துல்லா எம்.பி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இந்த நிகழ்வில் அயலக தமிழர் நலவாரியம் தலைவர் கார்த்திகேய சேனாதிபதி முன்னிலை வகித்தார். இதில் சவுதி அரேபிய ,சென்னை அயலக அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது சவுதி அரேபியா தம்மாம் அமைப்பாளர் வெங்கடேசன், துணை அமைப்பாளர் திருச்சி ஆரிப் மக்பூல், ஒருங்கிணைப்பாளர் சீனி முகம்மது, பொருளாளர் துறையூர் கமால் ,

சவுதி அரேபியா அயலக அணியின் திருச்சி யூனுஸ், சென்னை இம்ரான் அஹம்து, அபூ ரயான் ஆசிப் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

மடிப்பாக்கம் சே.சிந்தன் தலைமையில் – எஸ்.வி.ரவிச்சந்திரன் முன்னிலையில்

உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்: 60 அடி உயர்கோபுர கொடிக்கம்பம் கல்வெட்டு!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்து நல உதவிகள் வழங்குகிறார்!

சென்னை, ஜன. 13 -

சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி துணைச் செயலாளர் மடிப்பாக்கம் சே.சிந்தன் ஏற்பாட்டில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பறிந்த நாளையொட்டி 60 அடி உயர் கோபுர கொடிக்கம்பம் - கல்வெட்டினை அமைச்சர் மா. சுப்பிரமணியன் இன்று காலை திறந்து வைக்கிறார்.

தி.மு.கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் இன எழுச்சி நாயகர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்த நாள் முன்னிட்டு கல்வெட்டுத் திறப்பு மற்றும் 60 அடி உயர் கோபுர கொடிக்கம்பத்தில் டியேற்று விழா இன்று (13.1.2024 - திங்கள்) காலை 8 மணிக்கு வேளச்சேரி - கைவேலி மேம்பாலம் அருகில் சோழிங்கநல்லூர் பகுதி துணை செயலாளர் மடிப்பாக்கம் சே. சிந்தன் தலைமையில் நடைபெறுகிறது.

14வது மண்டல குழு தலைவர் - சோழிங்கநல்லூர் பகுதி கழக செயலாளர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் முன்னிலை வகிக்கிறார்.

மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் / சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா. சுப்பிரமணியன் 60 அடி உயர் கோபுர கொடிக் கம்பத்தில் கழகக் கொடி ஏற்றி வைத்து, கல்வெட்டினை திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. , சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ் அரவிந்த்ர மேஷ், .வி.எஸ் சமீனாசெல்வம் எம்.சி. பகுதி அவைத் தலைவர் எம்.பி.அரிகிருஷ்ணன், 188அ வட்டச் செயலாளர் வி.ரஞ்சித்குமார், 188-வது வட்டச் செயலாளர் ஜி.சுரேஷ், வட்டக் கழக நிர்வாகிகள் ஜி.ஆசீர்வாதம், மா.ப.சத்திய சீலன்(எ)அப்புன், சி.இளையராஜா, எம்.ஸ்ரீதேவி, பி.எம். அப்பு , டி.அசோக், ஜி.வி.ரகு, வி.விஸ்வநாதன், சி.எஸ்.முத்து, செ.முரளி, ப.சக்திவேல், ஜெ. ரமேஷ், இ.ராஜ்குமார், டி.புருஷோத்தமன், பி.யுவராஜ், ஆர். அருண்ராஞ்சித், பி.சத்யபாலன், எம்.ரகுநாதன், ஏ.ரமேஷ், வி. நாகராஜ், டி.எஸ்.ராஜா, ஆர். முருகா, ஆர்.அருண், பி.அசார், சிமியோன், என்.ஜாகிர், எம். சதீஷ், ஆர்.ராசுகுட்டி, ஆர். விக்கி, ஜெய், எஸ்.ஏ.எஸ்.அர்ஜுன், எஸ்.ஏ.எஸ்.சஞ்சய், கழக தேவராஜ், ராமு, டி.சுபகிருது, எம்.எஸ்.ராஜவேல், எம். எஸ்.கந்தப்பன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா நிகழ்ச்சி ஏற்பாட்டில் - விருகம்பாக்கம் தொகுதியில்

1900 நபர்களுக்கு பொங்கல் தொகுப்பு: அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி - எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ - காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஜன. 13

சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் தொகுதியில் தமிழ் புத்தாண்டு (ம) தமிழர் திருநாள் சமத்துவ பொங்கல் விழா முன்னிட்டு விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா தலைமையில் இன்று (13.1.2025 திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு, 1900 பொது மக்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கும் விழா நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.கண்ணன், மு.ராசா, வாசுகி பாண்டியன், உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்டக் கழகச் செயலாளர்கள் கோயம்பேடு பொன். லோகு, பூக்கடை ஆர்.பழனிசாமி, ராஜ்.செழியன், பி.கே.குமார், அ.கதிரேசன், வழக்கறிஞர் கே.சதீஷ்கண்ணன், சோ.செந்தில்குமார், எஸ்.மைக்கேல், மு.கோவிந்தராஜன், வீ.ஏ.ராஜா, எஸ்.பாஸ்கரன், தஞ்சை பாபு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.விநாயகமூர்த்தி, ச.சங்கர்கணேஷ், ஆர்.கிருஷ்ணகுமார், ஜெ.இ.பாண்டியன், கா.வீ.தியாகராஜன், செ.ரவி, கோட்டூர் எஸ்.பிரகாஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் மா. சுப்பிரமணியன் கலந்து கொண்டு பொங்கல் தொகுப்பினை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ, காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, துணை மேயர் மு.மகேஷ்குமார், கணக்கு நிலைக்குழுத் தலைவர் க.தனசேகரன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், மாநில வர்த்தக அணி செயலாளர் காசி.முத்து மாணிக்கம், தொகுதி பார்வையாளர் வே.உமாகாந்த், மண்டலக் குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வே.கௌதமன், மாநில மகளிர் அணி சமூக வலைதளப் பொறுப்பாளர்கள் ரத்னா லோகேஸ்வரன், மருத்துவர் யாழினி, நிலவரசி துரைராஜ், சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா சையத், ராம மூர்த்தி, சுப.முத்துவேல், மு. மேகநாதன், எஸ்.அயுபக்கர், க.சமையன், அய்யாவு, பழனி, இரா.சங்கர், சி.நந்தகோபால், த.முத்துமாரியப்பன், எஸ். கருப்பசாமி, எம்.வீரா,

எஸ்.ரவி, ஏ.ஜெகதீசன், போஸ்.பழனியப்பன், பூ.ராஜா, கே.முருகன், க.இளங்கோ, என்.ரவி, பா.தினேஷ்குமார், சு.இளங்கோவன், சொ.ஜெயகுமார், வி.ச.சங்கரன், க.அர்ச்சுனன், ச.ரா.சீனிவாசன், ஆர். டி.நல்லேந்திரன், கே.பாலமுருகன், அர.அ.எழில்வாணன், அ.ஸ்ரீதர், எஸ்.சண்முகநாதன், ப.தென்னரசு, சென்னை அரங்கநாதன், பா.பெரியசாமி, லட்சுமி, பா.மேகலா, ஏ.முருகுராம், உரஹ்மத்துல்லா, என். எம்.முகமது ரியாஸ், பி.சுரேஷ், நிவேதிதா, பாஸ்கர், உ.சீனிவாசன்,

ச.பொன்னுரங்கம், பா.பாலமுருகன், எம்.மாதவன், கே.வி.எஸ்.சுரேஷ் உநிலவரசன், அனல், அய்யப்பன், உ.கோட்டீஸ்வரன், எஸ். ஆனந்த்குமார், ஏ.எம்.ரவிமெயயால், ஆர்.சி.மோகன், வி.ஏ. மகாதேவன், ஆ.நசீர், டி.கலீம், உ.ட.மகேஷ், து.ராஜா, எஸ். முருகன், பூங்குழலி, ஆர்.விஜயலட்சுமி, பா.குமரன், கே. ராஜேஷ், பி.கசாலி, பொன். பாஸ்கர், கே.வெங்கடேசன், இரா.பாஸ்கரன், பொன். கோவிந்தராஜன், டி.எஸ்.பி. தமிழ்செல்வன், தலைமை கழக, மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்புகின்றனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம். உத்திரமேரூர் ஒன்றிய கழக நிர்வாகிகள் உத்திரமேரூர் ஒன்றியத்திற்குட்பட்ட கிளைகழகங்களின் செயலாளர். நிர்வாகிகள் மற்றும் பேரூர் கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கினர். உடன் ஒன்றியகழக செயலாளர் கெ.ஞானசேகரன். ஒன்றிய கவுன்சிலர், மற்றும் பேரூராட்சி செயலாளர் என். எஸ்.பாரிவள்ளல். பேரூராட்சி தலைவர் பொன். சசிகுமார், துணை தலைவர். கோவிந்தராஜ், ஒன்றிய அவை தலைவர் த.சுப்பராயன்.. ஒன்றியதுணை செயலாளர்கள் எஸ்.தயாளன், சுகுணா சுந்தரராஜன் ஏ.எம்.கெங்கன், மா.பி..மாயகிருஷ்ணன், டி.எஸ்.குமார் தேவ், கார்த்தி, தாமஸ், இளைஞரணி. கோபிநாத், ஆதிநாராயணன், தமிழ் தயாளன் மற்றும் கழகநிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

ஜி.கே. விவேகானந்தன் (எ) ரவி தலைமையில்

புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் சார்பில் பொங்கல் விழா!

5000 பேருக்கு அமைச்சர் தா.மோ. அன்பரசன் பரிசு வழங்குகிறார்!

சென்னை,ஜன.13-

புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய செயலாளர் மூவரசம்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் ஜி .கே. விவேகானந்தன் (எ) ரவி தலைமையில் இன்று (13.01.2025 திங்கட்கிழமை) காலை 8.30மணியளவில் மூவரசம்பட்டு கட்சி அலுவலகம் (ராகவா நகர் மூவரசம்பட்டு)-ல் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் 5000 குடும்பங்களுக்கு தைப் பொங்கல் பரிசு வழங்கும் விழாவை துவக்கி வைத்து பொங்கல் பரிசு பொருட்கள் வழங்குகிறார். இவ்விழாவில் மூவரசம்பட்டு ஊராட்சி கிளைக் கழகச் செயலாளர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, மற்றும் கழக உடன் பிறப்புகள் கலந்து கொள்கின்றனர்.

தமிழர் திருநாளாம் பொங்கல் நன்னாளை முன்னிட்டு கழக அரசின் சாதனைகள் விளக்க பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் தொடர் நிகழ்ச்சியை தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி 141 வது வட்டத்தில் துவக்கி வைத்து, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சென்னை தென் மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, மாவட்ட அவைத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, 141 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராஜா அன்பழகன், 141 வது வட்டச் செயலாளர் ललிதாபுரம் என்.துரை, 141 (அ) வட்டச் செயலாளர் எஸ்.லட்சுமிகாந்தன், 133 (அ) வட்டச் செயலாளர் பி.மாரி, 134 (அ) வட்டச் செயலாளர் ஜி.பி.செந்தில்குமரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜெ.ஜானகிராமன், மகளிர் தொண்டர் அணி மாவட்ட அமைப்பாளர் மோனிஷா கருணாநிதி, முன்னாள் வட்டச் செயலாளர் கோ.உதயசூரியன், 141 வது வட்ட அவைத் தலைவர் பி.கிருஷ்ணமூர்த்தி, வி.பழனிசாமி, எஸ்.எம்.கார்த்திக்ராஜா, எம்.மகேஷ்வரி, கே.லட்சுமிபதி, ஏ.ஆர்.இ.சுப்பிரமணி, சன்.சரவணன், ஏ.கோவிந்தராஜன், ஆர்.குணசேகரன், எம்.பாபு மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.